மஹறகம நகர சபை - 2024
----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹறகம நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, மஹறகம நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் நிர்ணயிக்கின்ற தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் மேற்கொள்ளப்பட்ட உள்ளடங்கள்களுக்காக தொடர்புகளின் அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டுக்கு உரிய பரவலாக்கப்பட்ட வேலை திட்டத்தின் கீழ் ரூபா 10,339,053 வும் மாகாண அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 81,158,566 வும் ஆக பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த வேலைகளுக்காக ரூபா 91,497,619 ஆன மொத்த மூலதன கிரயம் வருடத்தினுள் மூலதனமாக்கப் படுவதற்கு பதிலாக திருத்தங்கள் மட்டும் பராமரிப்பு செலவுகளாக காட்டப்பட்டிருந்தது.	வேலை பிரிவிலும் இந்த பராமரிப்பு மட்டும் திருத்த செலவொன்றாக செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக.	மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகளை சரியாக அடையாளம் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	வருடத்தினுள் பொது நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ள பாதைகள், பாலங்கள், காண்களின் மூலதனமாக்கப்பட்ட கிரயம் ரூபா	2025 ஆண்டில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	42,610,560 ஆக காணப்பட்ட போதிலும் கணக்கிற்கு ரூபா 49,710,560 ஆக குறிக்கப்பட்டிருந்ததன் காரணமாக பாதைகள், பாலங்கள் மற்றும் காண்களின் கணக்கு ரூபா 7,100,000 வினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.		
(இ)	2024 டிசம்பர் 31ஆம் தேதி நகர சபையினால் ஒப்பந்திடப்பட்டு பணிகள் நிறைவு செய்யப்படாத வேலைகளின் பெறுமதி ரூபா 37,082,254 ஆக காணப்பட்ட போதிலும், பேரெட்டு கணக்குகளில் ரூபா 79,652,831 ஆக ரூபா 42,570,577 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இடம்பெறாத வேலைகள் காணப்படுகின்றதா என்பதை கண்டறிந்து சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	மஹரகம தம்பஹேன பாதை கிரம்பர் தோட்ட காணியை கையகப்படுத்திக் கொள்வதற்காக நகர சபையினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 7,100,000 தொகை பாதைகள், காண்கள் கணக்குகளில் குறிப்பிடப்பட்டதன் காரணமாக காணிகள் கணக்கு அந்த தொகையினால் குறைவாகவும் பாதைகள், காண்கள் கணக்கு கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	மஹரகம நகர அபிவிருத்திக்காக மஹரகம பழைய பாதையில் அமைந்துள்ள சியம்பலாகஹவத்த காணியை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந் ததுடன் கையகப்படுத்தும் சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டு தொகையாக ரூபா 94,242,750 வெளியிடப்பட்டிருந்தது. நகர சபையினால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 30,000,000 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் செலுத்தப்பட வேண்டிய எஞ்சிய இழப்பீட்டு தொகை ஆன ரூபா 64,242,750 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நாவின்ன விளையாட்டு அரங்கை சபைக்கு சுவீகரித்துக் கொள்வதற்காக செலுத்தப்பட	2025 ஆண்டில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

	வேண்டிய ரூபா 4,912,237 தொகையும் அட்டுறு கொடுப்பனவின் கீழ் கணக்கீடு செய்யப்படாததனால் ரூபா 69,154,987 இதனால் நடைமுறை பொறுப்புக்கள் குறைவாக காட்டப்பட்டிருந்தது.		
(ஊ)	நகர சபையினால் சூரிய மின் சக்தி கட்டமைப்பை நிறுவுவதற்காக ரூபா 13,094,564 செலவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 7,104,000 மாத்திரம் மூலதனம் ஆக்கப்பட்டு ரூபா 5,990,564 மூலதனமாக்கப்படாமல் இருந்ததன் காரணமாக பொருத்துதல் கணக்கு அந்த அளவில் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டில் கழிவுகளை அகற்றும் கட்டணமாக பணமாக கிடைக்கப்பெற்று இருந்த ரூபா 8,586,481 மற்றும் முன்னைய வருடத்திற்கு உரிய சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,752,323 வருமானம் அட்டுறு அடிப்படையில் தனக்கீடு மேற்கொள்ளப்படாமல் பண அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 1,752,323 இதனால் மீளாய்வாண்டில் சேவை கட்டணம் வருமானம் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஏ)	மீளாய்வாண்டில் பொது நிதியம், மாகாண அபிவிருத்தி மானியங்கள் மற்றும் பரவலாக்கப்பட்ட நிதியம் நிதியாக்கப்பட்ட வேலைகள் நிறைவு செய்யப்பட்ட செயல்திட்டங்களின் மொத்த கிரயம் ரூபா 370,105,680 ஆக கணக்காய்வில் தெளிவுபடுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதி கூற்றுகளில் பொருத்துதலின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்த ரூபா 42,610,560 மற்றும் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு ஆக காட்டப்பட்டிருந்த ரூபா 309,653,666 வும் உடனான கணக்கீடு செய்யப்பட்டுள்ள வேலைகள் கிரயம் ரூபா 352,264,226 ஆகும். அதன் பிரகாரம் கணக்கீடு செய்யப்படாத வருடத்தின் வேலைகள் நிறைவு செய்யப்பட்ட பணிகளின் கிரயம் ரூபா 17,841,454 ஆகும். இருப்பினும் ரூபா 370 மில்லியன் ஆன கிரயம்	ரூபா 370 மில்லியன் தொகையை சேகரித்துக் கொண்ட முறையை தெளிவுபடுத்துவதாயின் பதில் ஒன்றை சமர்ப்பிக்க முடியும் என்பதாக.	விடயங்களை கண்டறிந்து அடையாளம் கண்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

சபைக்கு கண்டறிய முடியாது உள்ளதாக செயலாளரினால் பதிலளிக்கப்பட்டது.

1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றுக்குரிய உபயோக பதிவேடுகள் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கிடையில் ரூபா 132,579,411 வேறுபாடு காணப்பட்டது.	பதிலளிக்கப்படவில்லை.	வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும்.
(ஆ)	பொது நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட 17 வேலைகளுக்கு மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட செலுத்தப்பட வேண்டிய மீதிகளில் ரூபா 4,351,720 வேறுபாடு ஒன்று காணப்பட்டது.	பதிலளிக்கப்படவில்லை.	வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 386,236,482 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 480,318,446 ஆக இருந்தது.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	சிபார்சுகள்
2024 டிசம்பர் 31 ஆம் தேதியில் இலங்கை வங்கி நடைமுறை கணக்கின் மற்றும் காசு புத்தகத்தில் ரூபா 112,658,373 மீதி ஒன்று காணப்பட்ட போதிலும், அன்றாட செலவுகளை மேற்கொள்வதற்கு போதுமான அளவு தொகை ஒன்றை வைத்துக்கொண்டு மிஞ்சிய பணத்தை குறுகிய அல்லது நீண்ட கால முதலீடுகளுக்கு ஈடுபடுத்திக் கொள்வது தொடர்பாக அவதானத்தை மேற்கொண்டு இருக்காது சபைக்கு பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த முதலீட்டு வருமானம் ஒன்று இழக்கப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	எஞ்சிய பணத்தை குறுகிய அல்லது நீண்ட கால முதலீடுகளுக்கு ஈடுபடுத்திக் கொள்வது தொடர்பாக சபையின் கவனம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பிடப்பட்ட வருமானம்	பில் போடப்பட்ட வருமானம்	சேர்க்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம	பில் போடப்பட்ட வருமானம	சேர்க்கப்பட்ட வருமானம	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
வியாபார மற்றும் குத்தகை வாடகை	251,200	261,667	261,936	248,229	247,433	260,095	244,475	243,218
நீர் கட்டணம்	27,961	26,780	29,050	10,455	25,260	27,461	23,076	15,337
ஏனைய வருமானம்	11,600	13,768	13,564	633	6,600	12,327	12,327	-
	6,280	9,030	9,030	-	6000	7,141	7,141	-
மொத்தம்	297,041	311,245	313,580	259,317	285,293	307,024	287,019	258,555

2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானம சேகரிக்கும் செயற்திறன் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) ஆதனவரியும் வரியும்		
(i) மீளாய்வாண்டுக்காக பட்டியலிடப்பட்ட வீத வரி வருமானம் ரூபா 255,075,242 ஆகும். இதில் 2024 டிசம்பர் 31ஆம் திகதியில் ரூபா 81,960,042 அவ்வாறெனில் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் நூற்றுக்கு முப்பத்திரெண்டு (32%) அறவிட்டுக் கொள்வதற்கு தவறியிருந்தது.	2024 டிசம்பர் 31ஆம் தேதி நிலைமை காட்டப்பட்டுள்ளதாக.	வீதவரி நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii) கடந்த ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 243,217,839 ஆன நிலுவை வீத வரி மீதியில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானம் தொடர்பான செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 78,638,324 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 164,579,515 அதாவது நூற்றுக்கு அறுபத்தேழு (67%) அறவிடுவதற்கு தவறியிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	வீதவரி நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) வாடகை		
(i) நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் நிலவிய ரூபா 15,337,227	பதிலளிக்கப்படவில்லை.	நிலுவை கடை வாடகையை அறவிட

	தொகையான நிலுவை கடையறை வாடகை வருமானத்திலிருந்து ரூபா 9,201,942தொகையினை அதாவது 60 சதவீதம் மீளாய்வாண்டினுள் அறவிட முடியாதிருந்தது.		நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	2024திசெம்பர் 31இல் உள்ளவாறு 132 கடையறைகளின் ரூபா 10,390,155ஆன நிலுவை .காணப்பட்டது. இந்த நிலுவையினுள் ஆண்டு 01இற்கும் 03 இடையிலான 36 கடைகளிலிருந்து 2,952,379தொகையும் ஆண்டு 03 இற்கும் 05இடையிலான 24 கடைகளிலிருந்து ரூபா 4,339,515தொகையும், 05 ஆண்டுகளை விஞ்சிய 07 கடைகளிலிருந்து ரூபா 1,109,821 தொகையும் அறவிட வேண்டியதாக இருந்தது. கடை வாடகை செலுத்தாத விற்பனை நிலையங்களின் உரிமையை உடன்படிக்கை பிரகாரம் மீண்டும் நகர சபைக்கு பெற்றுக் கொண்டு ஏனைய தரப்பினரிற்கு வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்காதமை நீண்ட காலமாக நிலுவை முன்கொண்டு வர காரணமாக இருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	நிலுவை கடை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	நீண்ட காலமாக மூடப்பட்டுள்ள காரணத்தால் மஹரகம் வாராந்த சந்தை கடை இலக்கம் 195 முதல் 249 வரை 55 கடைகள் பில்லிடல் நிறுத்தப்பட்டு நிலுவை கடை வாடகையான ரூபா 3இ008இ390 தொகை பதிவழிக்கப்படிருந்த போதும், 2024 திசெம்பர் 31திகதி வரை அந்த கடையறைகளை ஆக்கபூர்வ பணிக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	கடையறைகளை மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஆக்கபூர்வமாக பயன்படுத்தியுள்ள கடையறைகளினது வாடகையை பதிவழித்தது தொடர்பாக முறையான விசாரணையொன்றை மேற்கொள்ள வேண்டும்.
(iv)	2024திசெம்பர் 31 திகதி உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்த 72 விற்பனை நிலையங்களிற்கிடையே உடன்படிக்கையை புதுப்பிக்க அல்லது விற்பனை நிலையங்களை சபைக்கு சுவீகரித்து ஏனைய தரப்பினரிற்கு குத்ததை வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	உடன்படிக்கையை புதுப்பித்துக் கொண்டு வாடகை அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும்.
(v)	உடன்படிக்கை காலம் முடிவடையும் திகதியை குறிப்பிடாது குத்தகைதாரர்களுடன் உடன்படிக்கை	பதிலளிக்கப்படவில்லை.	71 கடையறைகள் இனதும் உடன்படிக்கைகளை

செய்த 71 கடையறைகள் சபைக்குரியதாக காணப்பட்டன அந்த கடையறைகளிலிருந்து 2024 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 1,778,999 அறவிட வேண்டியதாக காணப்பட்ட போதும் அந்த கடையறைகள் தொடர்பாக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க முடியுமா என்பது பிரச்சினைக்குரிய விடயமாக காணப்பட்டது.		முறையாக்க வேண்டியதுடன், நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

திண்மக்கழிவு முகாமைத்துவம

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)(i)	கழிவுகள் முகாமைத்துவம் தொடர்பாக ஒழுங்கான திட்டமொன்றை தயாரித்திருக்காததால் கரதியான கழிவு கொட்டிலிற்கு கழிவுகை வெளியிடுவதற்காக ரூபா 88,417,693 தொகையையும், வாடகைக்கு பெற்ற வாகனங்களிற்காக ரூபா 46,583,479 தொகை மற்றும் கழிவுகளை போக்குவரத்து செய்யும் சபையின் வாகனங்களை திருத்துவதற்கு ஆண்டினுள் ரூபா 70,276,344 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதாவது கழிவுகளை திரட்ட மற்றும் வெளியிடுவதற்காக மாத்திரம் 2024 ஆண்டினுள் செலவினம் ரூபா 205,277,516 ஆனது. நகர சபை கட்டளைச் சட்டத்தின் 119 பரிவின் பிரகாரம் கழிவுகள் சபையின் ஆதனமொன்றாக இருக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், 2024 ஆண்டில் சபையினால் அதன் மூலம் வருமானம் ஈட்டுவதற்கு அல்லது செலவுகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்காததால் கழிவுகளை வெளியேற்றுவது நகர சபைக்கு பாரிய செலவொன்றாக இருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	ஒழுங்கான கழிவு முகாமைத்துவ திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்துவதன் மூலம் கிரயத்தை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ii)	சபை அதிகார பிரதேசத்தினுள் நடாத்திச் செல்லப்படும் வியாபார நிலையங்களினூடாக உருவாகும் கழிவுகளை நகர சபையினால் திரட்டும் சேவைக்காக 2024 ஜுன் 30 திகதி வரை 146 வியாபார நிலையங்களிலிருந்து ரூபா 8,473,500 தொகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. அவற்றில் 10 வியாபார நிலையங்களிலிருந்து ரூபா 2,323,650 தொகை 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாகவும் 32 நிறுவனங்களிலிருந்து ரூபா 2,910,000 தொகையும் ஆண்டு 03 இற்கும் 05 இடையிலான காலமாக நிலுவையாக காணப்பட்டது. 2024 திசெம்பர் 31 திகதிக்கு கிடைக்க வேண்டிய கழிவு கட்டணம் தொடர்பான காலரீதியான பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	நிலுவை கழிவுக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் வியாபாரக் கழிவுகளை அகற்றியதற்காக ரூபா. 10,338,804 வருமானத்தை பெற்றிருந்த போதும் சபையினால் குப்பை வரி அறவிட துணைச் சட்டத்தை விதித்திருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	குப்பை வரி அறவிட துணைச் சட்டத்தை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சுமார் 05 ஆண்டு காலமாக நிலவி வரும் நீதிமன்ற வைப்பு, பிணை வைப்பு மற்றும் NBT கணக்குகளின் கூட்டு மீதியான ரூபா 5,193,558 தொகையை மீளாய்வாண்டிலும் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025 ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென.	மீதிகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை கைத்தொழில் கடன்கொடுனர் மீதி ரூபா 62,627,446 ஆன போதும், அதனுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக தீர்க்கப்படாது காணப்படும் ரூபா 14,374,561 ஆன மீதியும் காணப்பட்டது.	பதிலளிக்கப்படவில்லை.	கடன் கொடுனர் மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	கணக்கு விடயங்கள் 10 இற்குரிய கூட்டுத் தொகை ரூபா 692,225,104 இற்கான அட்டவணைகள் சரியாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	அட்டவணை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ)	காணிகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கட்டிட பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் நகர சபைக்குரிய காணிகளை மீள்மதிப்பீடு செய்து அப்பெறுமானங்களை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும்.
(உ)	சிறியளவிலான மாசுபடுத்தும் கைத்தொழில்/ செயன்முறைகளிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் விநியோகிப்பது தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான வழிகாட்டியின் 3.3.(அ.), (ஆ.) மற்றும் (இ.) அறிவுரை பிரகாரம் கள பரீட்சிப்பு குழுவிற்கு உட்படுத்த வேண்டிய உத்தியோகத்தர்கள் பற்றி அறிவுரை வழங்கியிருந்த போதும், அதன் பிரகாரம் செய்றபடாததனால் வழிகாட்டியின 3.3.2 (அ.), (ஆ.) மற்றும் (இ.) அறிவுரை பிரகாரம் களக் குழுவின் அறிக்கையை தயாரிக்கும் பணிப்பொறுப்பு சரியாக இடம்பெற்றுள்ளதாக என்பது தொடர்பாக மற்றும் கள பரீடசிப்பு குழுவின் மூலம் எதிர்பார்த நோக்கங்கள் அடையப் பெற்றுள்ளனவா என்பது கணக்கயாய்வின் போது பிரச்சினைக்குரியதானது.	பதிலளிக்கப்படவில்லை.	வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	சிறிபுர, சிகேரா பாதை, மாதிவெல கோட்டே பாதையில் வீடொன்றிற்கு அருகில் நகர சபைக்கு சொந்தமான பாதையின் மதில் அரித்துச் செல்லல் மற்றும் மாதிவெல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 03 ஆம் ஒழுங்கை, பாதையின் ஒரு பகுதி மூழ்குதல் மற்றும் அதற்கு அண்டியதாக வித்தல் நிலையற்றதாகுதல் தொடர்பாக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் அபாய முகாமைத்துவ பரிவினால் சமர்ப்பித்திருந்த புவியியல் கணிப்பீட்டு அறிக்கையின் பரிந்துரைகள் நீண்டுகால் பரிந்துரைகளை செயற்படுத்தும் வரை குருகிய கால பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் அந்த குருகிய கால பரிந்துரைகளை சபையினால் செயற்படுத்தியதாக கணக்காய்வின் போது உறுதியாகவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	இடர்களை முகாமைத்துவம் செய்வதற்காக புவியியல் ஆய்வறிக்கையின் பரிந்துரையை செயற்படுத்த வேண்டும்.

(எ)	சிரிபாபுர ஊடாக மாதிவெல தலபத்பிடியை இணைக்கும் எல்லையின் வித்தல் உடைந்து விழுந்ததால் ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற நிலைமை தொடர்பாக எந்தவித முயற்சியையும் எடுப்பது தொடர்பாக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் அபாய முகாமைத்துவ பிரிவினால் வழங்கியுள்ள அறிக்கையிற்கு இணங்க செயற்பாடுகளை எடுக்க வேண்டுமென இடர் முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நகர சபை செயலாளரிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதும், 2024 ஜுன் 25 திகதி சிரிபாபுர அபிவிருத்தி அமைப்பு மீண்டும் கோரும் வரை சபை துரித நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நீண்ட காலமாக மண் வெட்டுவது தொடர்பாக உரிய கட்டுப்பாடு இல்லாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	பதிலளிக்கப்படவில்லை.	நீண்ட காலமாக மண் வெட்டுவதானல் ஏற்படும் அபாயத்தை குறைத்துக் கொள்ள சரியான கட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டும்.
(ஏ)	நகர சபை நிதி நிர்வாகத்திற்கு உரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி இலக்கம் 42 பிரகாரம் நகர சபையினால் பேணிச் செல்லும் அனைத்து ஆதனங்களையும் இன்வென்றியிற்கு உட்படுத்தியிக்க வேண்டியதுடன், ஒவ்வொறு நிதியாண்டு இறுதியிலும் ஆதன கணிப்பீடொன்றை மேற்கொண்டு உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டடு நியமத்திற்கு இணங்க உள்ளூராட்சி ஆணையாளர் அதற்காக விதிக்கும் படிவத்தின் இணங்கயிதாக தயாரிக்கப்பட்ட இன்வென்றி பதிவேட்டிற்கு உட்படுத்தி நாளாதுவரையாக பேணிச் செல்ல வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	விதி மற்றும் கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நாவின்ன விளையாட்டரங்கு நகர சபைக்கு கையளிப்பதற்காக ரூபா	பதிலளிக்கப்படவில்லை.	விளையாட்ரங்கை கையேற்பதற்கு

13,717,577 தொகை செலுத்தப்பட்டதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு (காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்) மேலும் ரூபா 4,912,236 செலுத்துவதற்கு உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த தொகை செலுத்தி சொத்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கருத்துரைகள்	பரிந்துரைகள்
ஆண்டில் LED மின்குழிழ் விநியோகித்தல் மற்றும் பொருத்துதல் தொடர்பான பரிசோதனையின் போது களஞ்சிய பின்காட் இன் பிரகாரம் களஞ்சியத்தில் இருந்து விநியோகிக்கப்பட்ட LED மின்குழிழ்களின் எண்ணிக்கையின் மொத்தம் 12,793 ஆக இருந்ததுடன் மின்சாரப் பிரிவில் பராமரிக்கப்படுகின்ற நாளாந்த மின்குமிழ் பொருத்துதல் பொழிப்பின் பிரகாரம் பொருத்தப்பட்ட எண்ணிக்கையின் கூட்டுமொத்தம் 12,002 ஆகும். அதன் பிரகாரம் 791 மின்குமிழ்கள் குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 1,601,775 ஆகும்.	பதிலளிக்கப்படவில்லை.	மின்குமிழ்களின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கருத்துரைகள்	பரிந்துரைகள்
தொழில்நுட்ப மதிப்பீட்டுக் photos cell 230W 10 A (for 3 Bulbs) கொள்வனவு செய்வதற்காக பரிந்துரை வழங்கியிருக்கும் போது சமமான உத்தரவாதக் காலமொன்று வழங்கிய 02 கூறுவிலைகள்	photos cell 230W 10 A (for 3 Bulbs) கொள்வனவு செய்யும் போது மாதிரிகளைப் பரீட்சித்து அதன் நியமத்தின் பிரகாரம் கொள்வனவு	பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

சமர்ப்பித்த 02 நிறுவனங்களுக்கு இடையே ஆகக் குறைந்த விலை பரிந்துரை செய்யப்படாமைக்கான காரணம் சமர்ப்பிக்காமல் ரூபா 1,650 ஆன ஆகக் கூடிய விலை சமர்ப்பித்த நிறுவனத்தில் இருந்து கொள்வனவு செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டமையால் ரூபா 412,500 நட்டம் ஏற்பட்டிருந்தது.	செய்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

3.6 ஒப்பந்த நிர்வாகம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2021 செப்தெம்பர் 29 ஆந் திகதிய 01/2021 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் குழுவினால் தகைமைகள் பரீட்சித்து உறுதிப்படுத்தப் பட்ட பின்னர் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு நிர்மாண வேலை ஒப்பந்தங்கள் கையளிக்க வேண்டியிருந்த போதிலும் கூட்டுப் பெறுமதி ரூபா 62,420,000 ஆன 18 நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பாக அவ்வாறு தகமைகளைப் பரீட்சித்து உறுதிப்படுத்தப்பட்டிருந்ததா என கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாது இருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	நிர்மாணங்களைக் கையளிக்கும் போது சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	வீர உயன சுற்றுவட்ட வீதி சுது போதி அருகில் பாதுகாப்பு சுவர் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,990,000 மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தில் விவசாய சங்கத்துடன் 2024 நவம்பர் 14 ஆந் திகதி உத்தரவாத பத்திரத்தில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் வீதியினை விரிவுபடுத்தல் தொடர்பாக அந்த உத்தரவாதப் பத்திரத்தில் உள்ளடக்கப்படாது இருந்ததுடன் வேலை விபரங்கள் மற்றும் விலை வீதங்கள் தொடர்பான பட்டோலை மற்றும் வேலைத் திட்டங்கள் தயாரித்து முறையாக கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. அந்த	பதிலளிக்கப்படவில்லை.	ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது அளவிடை பத்திரம் மற்றும் திட்டம் தயாரித்து முறையான உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் மூலதன வேலைகள்

	வீதியில் நடுப்பகுதி மாத்திரம் விரிவு படுத்தியதன் மூலம் நெருக்கடிகளை குறைத்துக் கொள்வதற்கான நிலைமை காணப்பட்டதா என பௌதீக பரீட்சையின் போது உறுதிப்படுத்த முடியாது இருந்ததுடன் பக்க சுவர் நிர்மாணத்திற்காக ஏற்பட்ட ரூபா 4,921,567 கிரயம் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருந்ததா எனவும் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாது இருந்தது.		திட்டமிட்டு அமுல்படுத்தப்படல் வேண்டும்.
(இ)	ஹோமாகம கலவிலபுர 3 ஆவது ஒழுங்கை காபட் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக சிரேஸ்ட பிரஜைகள் சங்கத்துடன் ரூபா 4,990,000 வேலை ஒப்பந்தத்தில் 2024 யூலை 31 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை செய்யப்பட்ட உத்தரவாதப் பத்திரத்திற்கு உரிய வேலை விபரங்கள் அதாவது திட்டம், வரைபட வேலை விபரங்கள் மற்றும் விலை வீதங்கள் தொடர்பான பட்டோலை தயாரித்து முறையாக உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த வேலை தொடர்பான பௌதீகப் பரிசோதனையின் போது கலவிலபுர 3 ஆவது ஒழுங்கையில் மீற்றர் 182.8 அளவில் காபட் இடப்பட்டிருந்ததுடன் அதிலும் மீற்றர் 136 மற்றும் 46.8 ஆக இரண்டு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீற்றர் 04 அளவு நீளத்தை உடைய அளவு ஒன்றுக்கு காபட் இடப்பட்டிருக்க வில்லை. கொடுப்பனவு அறிக்கையில் விடய இலக்கம் 9 இன் கீழ் கனமீற்றர் 154.5 இற்காக அலகு ஒன்றிற்கு ரூபா 5,237 வீதம் ரூபா 809,116.50 செலுத்தப்பட்டிருந்த போதிலும் மேல் மாகாண பொறியியல் பணியகத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட வீதி கட்டண பட்டோலையின் பிரகாரம் அந்த பணிகளுக்காக செலுத்த முடியுமான தொகை கனமீற்றருக்கு ரூபா 4,236 ஆனமையால் ரூபா 154,654.50 இனால்	பதிலளிக்கப்படவில்லை.	முறையான பிரகாரம் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் வீதி கட்டண பட்டோலையின் பிரகாரம் குறித்துரைத்த பணிகளுக்கு உரிய குறித்துரைத்த விலை வீதங்களில் செலுத்துவதற்கு கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

	செயற்திட்ட செலவினம் அதிகரித்து இருந்தது.		
(ஈ)	அமு எட்டமுல்ல வீதி வயற் பகுதியில் பக்கச் சுவர் ஒன்றை நிர்மாணிப்பதற்காக கிரயம் ரூபா 4,950,000 ஆன மதிப்பீட்டுக்கு சமூக அடிப்படையிலான சபை ஒன்றுடன் 2024 திசெம்பர் 12 ஆந் திகதி உடன்படிக்கை செய்திருந்த போதிலும் உடன்படிக்கை உத்தரவாதப் பத்திரத்தின் பிரகாரம் வேலைகளுக்கு உரிய திட்டம், வரைபடம், வேலை விபரம் மற்றும் விலை வீத எண்ணிக்கை தொடர்பான பட்டோலை போன்றவற்றுக்கு கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. வேலைக்காக மதிப்பீடுகள் இரண்டு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் இரண்டாவது மதிப்பீட்டின் வேலை விபரங்கள் மாற்றப்பட்டிருந்த போதிலும் அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 09 நாட்களில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த வேலைக்காக 2024 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 4,857,986 செலுத்தப்பட்டதுடன் கொங்கிரீட் வேலை நிறைவேற்றியதன் பின்னர் வேலைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆகக் குறைந்தது 21 நாட்கள் எடுக்க வேண்டியிருந்த போதிலும் அதற்கு முன்னர் கொடுப்பனவு பரிந்துரை செய்யப்பட்டமை சரச்சைக்குரிய விடயமாக இருந்தது. மேலும் 09 நாட்களில் பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக கொடுப்பனவு அறிக்கையின் இலக்கம் 15 இன் கீழ் (Tractor & Tailor (3Ton) (Bo-17)) நாளொன்றுக்கு ரூபா 12,821 வீதம் 12 நாட்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டமையால் ரூபா 38,463 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	நிர்மாண ஒப்பந்தங்களைக் கையளிக்கும் சரியாக மதிப்பீடு தயாரித்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் முறையான உடன்படிக்கை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் வேலைகளின் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு மேலதிக கொடுப்பனவுகள் மீள அறவிடப்படல் வேண்டும்.
(உ)	**வேலை ஆரம்பிக்கப்படாத நிர்மாணங்கள்**		
(i)	தலபத்பிட்டி கலேலிந்த பழுது பார்த்தலுக்காக 2023 ஆகஸ்ட் 17 ஆந்	பதிலளிக்கப்படவில்லை.	உடன்படிக்கையின் பிரகாரம்

	திகதி தயாரிக்கப்பட்ட ரூபா 1,750,000 ஆன கிரய மதிப்பீட்டுக்கு விவசாய சங்கத்துடன் 2024 யூலை 31 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் 2025 சனவரி 22 ஆந் திகதி வரையிலும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.		வேலைகளை நிறைவேற்றுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	கொடிகமுவ சுடலைக் கூடத்தில் நிறப்பூச்சுக்கள் மற்றும் பழுது பார்த்தலுக்காக ரூபா 2,000,000 மதிப்பீடு செய்யப்பட்ட வேலைப் பெறுமதியில் சிரேஸ்ட பிரஜைகள் சங்கத்துடன் 2024 திசெம்பர் உடன்படிக்கை செய்யப்பட்ட முதல் உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியில் உத்தரவாதப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியில் இருந்து 02 மாதங்களுக்குள் வேலைகளை பூர்த்தி செய்து கையளிக்க வேண்டியிருந்த போதிலும் 2025 மார்ச் 18 ஆந் திகதி வரையிலும் உரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	முறையான பிரகாரம் உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதற்கும் வேலைகளை உரிய பிரகாரம் நிறைவேற்றிக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	மகரகம நீலம் மகர வீதி கொஹில கொட்டுவ நிலத்தில் இரண்டு மாடி சனசமூக மண்டப கட்டிடத்தின் முதலாவது மாடி நிர்மாணிப்பதற்காக ரூபா 4,000,000 மதிப்பீட்டில் சமூக சபையுடன் 2020 செப்தெம்பர் 21 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதும் இந்த நிர்மாணங்கள் தொடர்பாக பொது மக்கள் எதிர்ப்பு தோன்றியிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட தொகையில் நடாத்தப்பட்ட முன்பள்ளிப் பாடசாலைக் கட்டிடத்தை பழுது பார்த்தல் மற்றும் இரண்டு மாடிக் கட்டிடத்தின் சிலப்பில் ஒரு பகுதியை மேவுகை செய்து முறையாக அமைக்குமாறு எதிர் பார்க்கையினால் கோரிக்கை இடப்பட்டமையால் அந்த கட்டத்திற்காக தேசிய கட்டிட ஆராய்சசி நிறுவனத்தின் தர அறிக்கை கோரி ரூபா 23,328 தொகையும் சபையினால்	பதிலளிக்கப்படவில்லை.	மக்களின் தேவையினை இனங்கண்டு சரியான நியமத்தின் பிரகாரம் நிர்மாணங்கள் திட்டமிடப்படல் வேண்டும்.

செலுத்தப்பட்டிருந்தது. அந்த அறிக்கை ரூபா 45,057 தொகை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததாக 2022 சனவரி 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலுக்கு சபை பதிலளிக்காது இருந்ததுடன் மீண்டும் அந்த அறிக்கை ரூபா 56,037 தொகையை செலுத்துமாறு அறிவிக்கப்பட்ட பின்னர் சபை 2024 சனவரி 30 ஆந் திகதி அந்த பணத்தை செலுத்தியமையால் ரூபா 10,980 மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.